**போக்குவரத்துச் செயற்திட்ட தயார்ப்படுத்தல் வசதி செயற்திட்டம் - 2019**

---

பேக்குவரத்துச் செயற்திட்ட தயார்ப்படுத்தல் வசதி செயற்திட்டத்தின் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2016 ஒக்தோபர் 28 ஆம் திகதிய 3425 எஸ்ஆர்ஜ (எஸ்எவ்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் IV ஆம் உறுப்புரையின் 4.03 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செறய்திட்த்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், தற்போது நெடுஞ்சாலைகள அமைச்சு என அழைக்கப்படுகின்ற முன்னைய துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு கருத்திட்ட நிறைவேற்று முகவராகவும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அமுலாக்கல் முகவராகவும் உள்ளன. சாத்தியவள கற்கை, விபரமான வடிவமைப்பு மற்றும் பெறுகை ஆவணங்கள் போன்றவற்றை தயாரிப்பதனூடாக வீதி, புகையிரத பாதை மற்றும் துறைமுக துனைப்பிரிவு போன்றவற்றிலான முன்னுரிமை போக்குவரத்து செயற்திட்டங்களின் ஆரம்ப கட்ட வினைத்திறனை அதிகரித்தல் மற்றும் செயற்திட்டத்தின் கண்காணிப்பு கட்டத்தின் போது அமுல்படுத்தல் ஆதரவுகளை வழங்குதல் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களாக உள்ளது. கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 1,697.48 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 11.34 மில்லியனானதுடன் அதில் ரூபா 1,496.90 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 10 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியினால் வழங்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. மிகுதி 200.58 மில்லியன் இலங்கை அரசாங்கத்தினால் நிதியளிக்க எதிர்பார்க்கப்பட்டிருந்தது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2017 சனவரி 28 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2022 திசெம்பர் 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து செம்மையாக்கல்களின் தாக்கத்தை தவிர்த்து, செயற் திட்டத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாரா நிதி நிலைமையியையும் நிதிச் செயலாற்றல் மற்றும் அதனது முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் அதனுடன் இனைந்த நிதிக் கூற்றுக்கள் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையானதும் நேர்மையானதுமான நிலைமை ஒன்றை தருகின்றது என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில், கருத்திட்டத்தின் தொடர்ந்தியங்கும் ஆற்றலினை மதிப்பீடு செய்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். கருத்திட்டத்தினை கணக்கொழிப்பதற்கு முகாமைத்துவம் கருதுமாயின் அல்லது மாற்றீடு இல்லாதவிடத்து செயற்பாடுகளை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தாலேயொழிய தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கருவின் அடிப்படையில் கணக்குகளை பேணுதல் மற்றும் கருத்திட்டத்தின் தொடர்ந்தியங்குவதற்குரிய விடயங்களை வெளிப்படுத்தல் என்பன முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

கருத்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

கருத்திட்டத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாக ஏடுகளும் அறிக்கைகளும் பேணப்படுதல் அவசியமாகும்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கருத்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| இல | கணக்கீட்டுக் குறைபாடுகள் | தொகை ரூபா மில்லியன் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|
| (அ) | இலங்கை மத்திய வங்கியின் முற்பணக்கணக்கிற்கான நிதிக்கூற்றுக்களில் காட்ப்பட்டிருந்த ரூபா 2.38 மில்லியன் நாணய மாற்று இலாபம் பிழையான கணக்கீட்டு நடைமுறையின் காரணமாக மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் ரூபா 1.39 மில்லியன் நட்டம் என காட்டப்பட்டிருந்தது. | 3.77 | முற்பணத்தின் மீள்மதிப்பீட்டு கணக்கு மற்றும் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள மொத்த நடைமுறைச்சொத்துக்கள் என்பன குறைத்துக்காட்டப்பட்டிருந்தன. | உடன்படுகிறோம். தவறின் காரணமாக இது இடம்பெற்றுள்ளது. | செயற்திட்டத்தின் உண்மையான சூழ்நிலையை காட்ட நாணயமாற்று இலாபம் மற்றும் நட்டம் என்பன சரியான அடையாளப்படுத்தப்பட்டு கணக்கிடப்படல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ஆ) | செயற்திட்ட நிர்வாக கையேட்டின் (பிஏஎம்) பிரகாரம் மீளாய்வாண்டிற்கான கடன் மீதான வட்டியினை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 50.41 | நடைமுறை வேலையின் பெறுமதி குறைவாக காட்டப்பட்டிருந்தது. | 2019 ஆம் ஆண்டில் எவ்வித கட்டணங்களும் காணப்படாததுடன் செயற்திட்டத்திற்கான வட்டிக்காக கணக்கிடப்பட்டிருக்கவுமில்லை. | கடன் உடன்படிக்கையின் பிரகாரம், கட்டணங்கள் செய்யப்பட்டிருந்தாலும் இல்லாவிட்டாலும் அறவிடப்படல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டில் தயாரிக்கப்பட்டிருந்த பண்னிரெண்டு (12) நாட்குறிப்பு பற்றுச்சீட்டுகளிற்கு செயற்திட்ட பணிப்பாளரிடமிருந்து அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை. | 186 | பலவீனமான உள்ளக கட்டுப்பாடு. | தற்போது அனைத்து நாட்குறிப்பு பற்றுக்கீட்டுகளும் செயற்திட்ட பனிப்பாளரினால் அனுமதிக்கப்பட்டுள்ளது. | அனைத்து நாட்குறிப்பு பதிவுகளும் பேரேட்டிற்கு மாற்றுவதற்கு முன்னர் அனுமதிக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | ஒரே செயற்திட்ட முகாமைத்துவ பிரிவினால் நான்கு வெளிநாட்டு நிதியளிப்பு செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருந்த போதிலும், செலுத்தப்பட்ட மொத்த கட்டிட வாடகையும் ஏனைய செயற்திட்டங்களிடையே பிரித்தொதுக்கப்படாமல் இச் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் முழுமையாக காட்டப்பட்டிருந்தது. | 6.2 | செயற்திட்டத்தின் கட்டிட வாடகை அதிகரித்து காணப்பட்டது. | உடன்படுகின்றேன். இருப்பினும், இது தொடர்பாக சில பிரச்சினைகளை எதிர்கொள்கின்றோம். | ஏற்பட்ட அனைத்து பொது மேந்தலைகளும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒதுக்கீட்டுமுறை ஒன்றினை பயன்படுத்தி ஒவ்வொரு செயற்திட்டத்திற்கும் வேறுவேறாக கணக்கிடப்படல் வேண்டும். |

## 3 பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்றிட்ட செயற்பாடுகளின் பௌதீக செயலாற்றல்

செயற்திட்டத்தினால் பூர்த்தியாக்க அடயாளப்படுத்தப்பட்ட ஆறு வேலை உறுப்படிகளில், ஆலோசனை (தனிப்பட்ட) சர்வதேச பிபிபி பெறுகை ஆலோசகர், ஆலோசனை (தனிப்பட்ட) போக்குவரத்து மாதிரி முன்னேற்பாடு (3 எண்ணிக்கை) மற்றும் அதிவேக அபிவிருத்தி செயற்திட்டம் என பெயரிடப்பட்ட 03 வேலை உறுப்படிகள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை.

### 3.2 குறைவாக பயன்படுத்தப்பட்ட வளங்கள்

| கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
| --- | --- | --- | --- |
| பதீட்டு ஒதுக்கீடு 18.5 மில்லியனில் 3.75 மில்லியன் மாத்திரமே 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | செயற்திட்டத்தின் குறிக்கோள் அடயப்படாமல் போகக்கூடும். | உடன்படுகின்றேன். | வினைத்திறனான முறையில் நிதிவளங்களை பயன்படுத்த உடனடி நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |